**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக் கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம்- மட்டம் 4**
**தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II- 2021/2022**
**LLU 4707/LWU2313- குடும்பச் சட்டம்**
**காலம்: ஒரு (01) மணித்தியாலம்**

**திகதி: 16.09.2022** **நேரம்: மு.ப. 9.30 - மு.ப 10.30**

**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

**ஒரு (01) வினாவிற்கு மட்டும் விடையளிக்குக**

1. ஒருவரது துணையையும் பிள்ளைகளையும் ஆதரிக்கவேண்டிய கடமை ஆனது நியதிச் சட்டங்கள் மற்றும் பொதுச் சட்டம் என்பவற்றால் இனங்காணப்பட்ட ஒரு கடப்பாடு ஆகும். குடும்பத்தின் நலனை உறுதிசெய்யும்பொருட்டு சட்டவாக்கமானது சட்டங்களை இயற்றுவதன் மூலம் காலத்திற்கு காலம் தலையீடுகளை மேற்கொண்டுள்ளது.

   ஆதரிப்பதற்கான பெற்றோர் மற்றும் துணைக்கான கடப்பாடு என்பனவற்றுடன் தொடர்புடைய இலங்கைச் சட்ட விருத்தியை பொருத்தமான நியதிச் சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றால் சுட்டிக்காட்டி ஆராய்க. **(20 புள்ளிகள்)**

2. சுமனா மற்றும் சரத் ஆகியோர் 10 வருடங்களுக்கு மேலாக திருமணம் புரிந்துள்ளனர். இத் திருமணத்தின் மூலம் இரு பிள்ளைகள் காணப்படுகின்றனர். அண்மைக் காலமாக இவர்களுக்கு இடையிலான திருமண உறவு மோசமடைந்திருந்ததுடன், சுமனா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். மனுவின் மூலம் இவள் திருமணத்தை முடிவுறுத்தவும், பிள்ளைகளின் கட்டுக் காவலைப் பெறவும் ஆணையொன்றையும் தீர்வொன்றையும் வேண்டினாள். சுமனா தனது மனுவில் சரத் இன்னொரு பெண்ணுடன் திருமணத்திற்கு புறம்பான உறவொன்றைக் கொண்டிருப்பதுடன், அவன் மதுவிற்கு அடிமையானவன் என்பதால் இவன் பிள்ளைகளின் கட்டுக் காவலைப் பெற தகுந்த முறையான நபர் அல்ல எனக் கோரினாள். மறுபுறம் சரத் பிள்ளைகளை கவனிக்கவும் போசாக்குடன் வளர்க்கவும் சுமனாவிற்கு போதுமான ஊதியம் இல்லை எனவும் அவனுக்கு போதிய ஊதியம் இருந்தமையினால் 'பிள்ளைகளின் கட்டுக்காவல் அவனுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டினான்.

   இவ் வழக்கின் நீதிபதி நீர் எனக் கருதுக. பிள்ளைகளின் கட்டுக் காவல் தொடர்பில் தீர்ப்பு ஒன்றை எழுதுக. உமது தீர்ப்பானது பிள்ளைகளின் கட்டுக்காவல் தொடர்பில் உமது தீர்மானத்தை மேற்கொள்ள நீர் கருத்திற்கொண்ட பொருத்தமான நீதியியல் தீர்ப்புக்களையும் பொருத்தமான சட்டக் கோட்பாடுகளின் வாதங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். **(20 புள்ளிகள்)**

*-பதிப்புரிமை பெற்றது-*